1971 ஜூலை 20]

ஹவுஸ் சர்ஜன்களின் ஊதியம்.

* 325. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஹவுஸ் சர்ஜன்களின் ஊதியத்தை அதிகப்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தற்பொழுது ஹவுஸ் சர்ஜன்களுக்கு மாதம் ஒன்றுக்கு அளிக்கப்படும் ஊதியத் தொகை எவ்வளவு என்பதையும், இனியேனும் கொஞ்சமாவது அவர்களுக்கு உயர்த்திக்கொடுக்க அரசு ஆலோசிக்குமா என்பதையும் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஹவுஸ் சர்ஜன்கள் என்பது உத்தியோகம் என்ற கருத்தில் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அது உத்தியோகம் அல்ல. பயிற்சி பெறுவதற்கு ஒரு வாய்ப்பு. பயிற்சி பெற்றால் டாக்டராக முடியும். பயிற்சி பெறும் காலத்தில் அலவன்ஸ்தான் சம்பளம் என்ற அடிப்படையில் அந்த நோக்கத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரி ஹவுஸ் சர்ஜன்களுக்குப் பயிற்சி நடத்தினால் பின்னால் அவர்கள் பிராக்டிஸ் நடத்த சாதகமாகயிருக்கிறது. இருந்தாலும் பயிற்சிபெறும் காலத்தில் கிடைக்கும் அலவன்ஸைக்கொண்டு வாழ்க்கையை நடத்த உதவிகரமாக இருக்கும் வகையில் சற்று உயர்த்திக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி இந்த ஊதியத்தின் மூலமாகத்தான் நடைபெறுகிறது என்று கருதுவதே தவறு. பல மாணவர்கள் இந்த ஊதியம் இல்லா விட்டாலும் பயிற்சி பெறுகிறோம் என்று வேறு மாநிலத்திலே படித்தவர்கள் இங்கே விண்ணப்பிக்கிறார்கள். மற்றொன்று இங்கே பயிற்சி கொடுத்து பிறகு அவர்களுக்கு முழுச்சம்பளத்துடன் அனைவரையும் வேலைக்கு எடுக்க முடியாது என்ற காரணத்தினால் 200 ரூபாய், 300 ரூபாய் என்ற அளவில் ஏற்படுத்தி அசிஸ்டென்ட் என்ற பெயரில் நியமிக்க முடியுமா என்று கருதும் நோக்கில் இதை வலியுறுத்துவது மொத்த சமுதாய நலனுக்கு மாறுபட்ட தாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : How many House Surgeons are given stipends and what is the amount given as stipend?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஐந்தரை ஆண்டுகள் படித்து முடித்த எல்லா மாணவர்களும் இந்தப் பயிற்சிக்கான வாய்ப்பு அளிக்கப்படுகிறார்கள்.